## தலைப்பு 151 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான திறைசேரி அச்சகக் குறிப்புக்களின் பிரகாரம் மொத்த செலவுகள் ரூபா 4,986,375,473 ஆக இருந்த போதிலும், நிதி செயலாற்றல் கூற்றில் மொத்த செலவு ரூபா 4,982,792,266 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக வெளிநாட்டுக் கடன் ரூபா 3,583,207 ஆல் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் செலவுகள் திறைசேரி இறுதிக் கணக்கு கூற்றுக்களுக்கான செலவு மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்து காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019.01.30 ஆந் திகதி திறைசேரி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த செலவு ரூபா 4,982,792,266 ஆக இருந்தும் கடைசியாக அதாவது 2019 பெப்ரவரி 05 ஆந் திகதி திறைசேரி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான செலவானது ரூபா 4,986,375,473 ஆகும். அதன் காரணமாக திறைசேரி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதி சரியாகும். |

### 1.6.2 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஒப்பந்தக்காரர்களுக்கான நிறுத்தி வைத்தல் பண வைப்புக் கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 173.81 மில்லியன் மீதி சம்பந்தமாக தனித்தனி மீதிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 78.6 மில்லியனாகும். நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்களை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது வைப்பு பதிவேட்டில் ஆண்டிற்கான பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் மீதிகள் தெளிவாக பதியப்பட வேண்டியதுடன் ஆண்டு இறுதி வைப்பு மீதி சம்பந்தமான தனித்தனி மீதிகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டியதுடன் வைப்புக் கணக்குகளைத் தீர்த்து வைத்தல் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்டங்களின் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு தேவையான விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்காமை மற்றும் ஒப்பந்த பொறுப்புக்களின் காலம் முடிவடைந்திருக்காமையின் அடிப்படையில் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதிகளின் மொத்தம் 78.6 மில்லியன் பணத்தை விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே அமைச்சிற்குரிய தனித்தனி மீதிகள் அமைச்சின் வைப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருந்ததுடன் உப அலுவலகங்களுக்குரிய தனித்தனி மீதிகள் அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் தீர்த்துவைக்கப்படாத உப கட்டுநிதி மீதிகள் ரூபா 45,246,534 ஆக இருந்ததுடன் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட முறையே ரூபா 8,000,000 மற்றும் ரூபா 1,679,428 தொகைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | கட்டுநிதி மீதியை தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற சாதகமற்ற நிதி நிலைமையின் காரணமாக அம்முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு முடியாதுள்ளது எனவும் அடுத்துவரும் ஆண்டுகளில் இலாபம் உழைப்பதன் அடிப்படையில் இம்முற்பணங்களை முடியுமான அளவு விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்து பிரிவின் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் ஏனைய சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் கீழுள்ளவாறான படிவங்களின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | கணக்காய்வில் காட்டப்பட்ட கணக்காய்வில் இணங்குகின்றேன். இதன் பின்னர் அமைச்சின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் சம்பந்தமாக ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்க கட்டிடங்கள் அனைத்திலுமுள்ள மின்சார துணைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருள் இருப்பு பதிவேட்டுப் புத்தகம் பேணப்படுதல் வேண்டும். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | அமைச்சினால் பேணப்படுகின்ற கணனிகள் துணைக்கருவிகள், மென் பிரதிகள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள், பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைக்கருவிகள், மென்பிரதிகள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| i. | XXIV ஆம் அத்தியாயத்தின் | ஒரு உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்று வந்து 02 மாதங்கள் கடந்ததன் | தாபன விதிக்கோவையின் | இக்கடன் மீதி தொடர்பாக ஏதாவது விபரத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1.6 ஆம் பந்தி | பின்னர் அல்லது ஒரு உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்ற 03 மாதங்கள் கடந்ததன் பின்னர் கடன் மீதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், 1987 ஆம் ஆண்டிலிருந்து 1994 ஆம் ஆண்டு கால வீச்சுக்குள் இடமாற்றம் பெற்றுச் சென்ற 15 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 295,772 மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | XXIV ஆம் அத்தியாத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.7 ஆந் திகதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேடிப்பார்க்க முடியாததானால் 1999 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 369 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ii. | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பந்திகள் | ஓய்வு பெறுவதற்கு நிர்ணயித்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியுள்ள அனைத்து கடன்கள் தொடர்பான விபரம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து உத்தியோகத்தரின் ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடைப் பணத்திலிருந்து அனைத்து கடன் மீதிகளையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 1985 இலிருந்து 1991 வரையான காலத்தில் ஓய்வுபெற்ற 34 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 127,580 தொகையான கடன் மீதி அறவிடப்படாதிருந்தது. | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பந்திகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தொடர்பான விபரத்தை தேடிப்பார்த்தல் மிகவும் சிக்கலானதாகும். சில கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய கடன் மீதிகள் 1999 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 369 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

#### (அ) அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மீனவ சமூகத்தை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்கு ஒதுக்கிடு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 4 மில்லியன் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. விசேட சட்டத்தால் வழங்கப்படுகின்ற அதிகாரமின்றி அப்பணத்திலிருந்து கூட்டுத்தாபனம் திருகோணமலையில் மீன் சந்தைக் கட்டிடத் தொகுதிக்கு வர்ணம் பூசும் செலவு ரூபா 3.7 மில்லியன் மற்றும் மின்சார முறைமையை திருத்தம் செய்யும் செலவுகள் ரூபா 235,221 தொகையுமாக 2017 ஆம் ஆண்டில் செலவுகளைத் தீர்த்து வைப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 200(2) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மற்றும் விசேட சட்டத்தால் வழங்கப்படுகின்ற அதிகாரத்தின் அடிப்படையில் செலவு செய்ய வேண்டியிருந்தது. | பதில்கள் வழங்கப்படவில்லை. |
| (ii) | உலர் வலயத்திலுள்ள நன்னீர் குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சிற்கு நிதிஏற்பாடு வழங்கப்பட வேண்டாம் எனவும் விவசாய அமைச்சுடன் தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளக்கூடியதான நிதி ஏற்பாட்டை பயன்படுத்த வேண்டுமெனவும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும் 10 தாம்போதிகளை துப்பரவு செய்யும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,000 மில்லியன் பணத்திலிருந்து கம்பஹா, கேகாலை, களுத்துறை, மாத்தறை ஆகிய பிரதேசங்களிலுள்ள 99 குளங்களை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 20 மில்லியன் விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்படாத செயற்பாடுகளுக்கு பணம் ஈடுபடுத்தப் படாதிருத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

**(ஆ) அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க நிருவாக அமைச்சின் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி அலுவலக சேவையாளர் சேவையில் பதவி வகிக்கின்றவர்களின் வேண்டுதல்களின் அடிப்படையில் அமைச்சின் மேலதிக செயலாளரினால் (நிருவாகம்) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது. | அரசாங்க நிருவாக அமைச்சின் இடமாற்ற கட்டளையின் பேரில் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு உத்தியோகத்தரின் இடமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். | கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன். இது சம்பந்தமாக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மதிப்பீட்டில் குறிப்பிடப்படாத 8 செலவு விடயங்களை புதிதாக ஏற்படுத்தி அதற்காக ரூபா 1,714.45 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 183 மில்லியன் தொகையான 3 செலவு விடயங்களுக்குரிய குறைநிரப்பு நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. 4 செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,159,092,254 தொகையில் 71 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான | தேசிய பாதீட்டிற்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சேமிப்புக்கள் ஏற்படுவதற்கு காரணமாக திறைசேரி கட்டுநிதி கிடைக்காமை, கொடுப்பனவிற்காக விலை பட்டியல்களைச் சமர்ப்பிக்காமை ஆகிய விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. புதிதாக ஏற்படுத்தப்பட்ட செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு நிதி ஏற்பாட்டு ஒதுக்கீடுகளின் சேமிப்பு தொடர்பான காரணம் முன்வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வீச்சுடைய நிதிஏற்பாடு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அமைச்சினால் 2017 ஆம் ஆண்டின் போது வர்ண மீன்களை இனவிருத்தி செய்வதற்காக நாரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 2,066,250 முற்பணத்தை மிகைத்து செலவு செய்த ரூபா 1,488,816 தொகையைத் தீர்த்து வைப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தலின் கீழ் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்தும் போது திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்காக செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் வர்ண நீர்வாழ் மிதக்கும் தாவரங்களை பயிர்ச்செய்கை செய்யும் செயற்திட்டத்திற்காக அமைச்சினால் நாரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 4.09 மில்லியன் முற்பணத்தில் முன்னைய ஆண்டு மற்றும் அடுத்து வரும் ஆண்டிற்காகச் செலவு செய்த ரூபா 930,142 மொத்த தொகை நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான செலவுகளைத் தீர்த்து வைப்பதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371(6) இல் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளுக்கு முரணாக முற்பணங்களைத் தீர்த்து வைக்கும் போது முற்பணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் செய்யப்பட்ட செலவுகள் மற்றும் அடுத்து வரும் ஆண்டுகளின் செலவுகளை எதிரீடு செய்யாதிருந்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |
| (ஈ) | மீன்பிடி கைத்தொழிலை அபிவிருத்தி செய்கின்ற 22 செயற்திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டிலிருந்து வழங்கப்பட்ட ரூபா | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றும் வகையில் வருடாந்த செலவு மதிப்பீடு | பதில்கள் வழங்கப்படவில்லை. |

| | |
|---|---|
| 4,920.5 மில்லியன் நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 2,578.7 மில்லியன் அல்லது 52 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிதிஏற்பாடு சேமிப்பாக இல்லாதிருந்த போதிலும், நிதிஏற்பாடுகளின் சேமிப்பை மிகைத்து 10 செலவு விடயங்களுக்காக ரூபா 646.20 மில்லியன் பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் செலவு விடயங்களின் சேமிப்புக்களை மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் செலவுகளின் அளவு நிதி ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டை மிகைக்காதிருக்க வேண்டியதுடன் ஒவ்வொரு செலவு விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளுக்குள் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவ்வாறு நிதிஏற்பாடு இல்லாதிருந்த போதிலும், 10 செலவு விடயங்கள் பேணப்படுவதாவது அமைச்சை செயற்படுத்தும் போது நாளாந்தம் செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற அத்தியாவசிய செலவுகளுக்காகவேயாகும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீன்பிடித்துறையின் அபிவிருத்திக்கு உதவியளிப்பது சம்பந்தமாக செயற்திட்டத்தின் கீழ் 7,000 துவிச்சக்கர வண்டிகள், 1000 உயிர் பாதுகாப்பு அங்கிகள், 1,000 தையல் மெசின்கள், 60,000 விவசாய உபகரணங்கள் என்பனவாக கடற்றொழில் நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிப்பதனை அடிப்படையாகக் கொண்டு ரூபா 300 மில்லியன் வெளிநாட்டுப் பணம் மானியம் | | |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ரூபா 43.4 மில்லியன் உள்நாட்டு நிதி வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே வெளிநாட்டுப் பணம் ரூபா 81.40 மில்லியனும் உள்நாட்டுப் பணம் ரூபா 43.32 மில்லியனும் செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | செயற்திட்டத்தின் செயற்பாடுகளை இனங்கண்டு 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் செயற்பாடுகளை இனங்கண்டு 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்வதுடன் இவ்வாறு இடம்பெறாமைக்கு கவனித்துக் கொள்வதாக தெரிவித்துக் கொள்வதுடன் பின்தொடர் நடவடிக்கைகளில் பலவீனம் காணப்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ii) | கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள், உயிர்காப்பு அங்கிகள், தையல் மெசின்கள் விவசாய உபகரணங்கள் என்பவை ஒப்படைக்கப்பட்டமையை உறுதிபப்டுத்துவதற்காக அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான மூல ஆவணங்கள் மற்றும் ஏடுகளைப் பேணுவதன் மூலம் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும். | அமைச்சின் ஒரு பொறுப்பாக ஏற்றுக் கொள்வதுடன் அப்பொறுப்பு செயற்திட்டத்தை அமுல்படுத்தல் நிறுவனமாகிய மீன்பிடித்துறை முகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் செயற்பாடுகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை போதியளவில் இல்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (iii) | இலங்கையிலுள்ள இந்திய தூதுவராலயத்தினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திரண்ட நேரடி நிதி செலவழித்தல்கள் ரூபா 138 மில்லியனாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 81.40 மில்லியனாக இருந்ததனால் ரூபா 56.60 | செலவுப் பதிவேட்டை நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தயாரித்தல் வேண்டும். | செயற்திட்டத்திற்கு திரண்ட நிதி செலவாக ரூபா 138 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 81.4 மில்லியனாகக் குறிப்பிட்டிருந்ததானது 7,000 துவிச்சக்கர வண்டிகள் 1,000 தையல் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | இயந்திரங்கள் 60,000 மண்வெட்டிகள் என்பவற்றை இறக்குமதி செய்வதற்காக செலவு செய்யப்பட்டுள்ள திரண்ட பெறுமதி ரூபா 138 மில்லியனாக இருந்ததனால் எனத் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) | முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவ நலன்பெறுனர்க்கு பகிர்ந்தளிப்பதை நோக்காகக் கொண்டு படகுகளையும் இன்ஜின்களையும் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 150 பயித் கிளாஸ் பட்டுகளையும் வெளியே பொருத்துகின்ற 150 இன்ஜின்களையும் வழங்குவதற்கு வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 117 மில்லியன் வெளிநாட்டு நிதிமானியமும் ரூபா 15 மில்லியன் உள்நாட்டு நிதிஏற்பாடுகளும் ஒதுக்கிடு செய்யப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு நிதி மானியமாக ரூபா 64.06 மில்லியனும் இலங்கை நிதியாக ரூபா 7.06 மில்லியனும் செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | இச் செயற்திட்டத்தின் செயலாற்றலை இனங்கண்டு 2018 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் செயலாற்றலை இனங்கண்டு 2018 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்வதுடன் இவ்வாறானவை இடம்பெறாமைக்கு கவனித்துக் கொள்வதாக தெரிவிக்கின்றேன். |
| (ii) | மீனவர்களுக்கு வழங்கப்பட்ட படகுகள் மற்றும் இன்ஜின்கள் தொடர்பான தகவல்களை அறிக்கையிடுவதற்காக ஒரு பதிவேட்டினைப் பேணுவதற்கும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கும் முல்லைத்தீவு மாவட்ட | தேவையான தொடக்க ஆவணங்களையும் ஏடுகளையும் பராமரிப்பதன் மூலம் நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலுமானதாக இருத்தல் வேண்டும். | பின்தொடர் நடவடிக்கையில் பலவீனம் உள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அப்பொருட்களை உரிய நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | இலங்கையிலுள்ள இந்திய தூதுவராயலயத்தினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திரண்ட நேரடி நிதியைச் செலவு செய்தல்கள் ரூபா 75.2 மில்லியனாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 64.06 மில்லியனாக இருந்ததனால் ரூபா 11.14 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | செலவுப் பதிவேட்டினை நிதிக்கூற்றுக்களுடன் இணக்கம் செய்வதற்கு இயலுமான வகையில் தயாரித்தல் வேண்டும். | இந்திய தூதுவராலயத்தினால் செலவுகளைக் கணித்த பொருள் கட்டளைகளில் குறிப்பிட்ட தொகை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதனால் அக்கணிப்பு பிழையானதாகும். கணக்காய்வு ஐய வினாக்களில் சுட்டிக்காட்டப்பட்ட பணமாகிய ரூபா 64.06 மில்லியன் சரியானது எனக் குறிப்பிடுகின்றேன். |
| (இ) | பூர்த்தியான (Hloistic) கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 300 மில்லியனாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்க குறிக்கோளாகிய மீனவ சமூகத்தின் வருமான நிலைமையை மேம்படுத்தும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்தாது செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது பொது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களின் நடவடிக்கைகளுக்கு 80 சதவீதமான முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. | உரிய ஆண்டுகளின் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் மேற்கொள்ளப் படுகின்ற நடவடிக்கைகளின் மூலம் செயற்திட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இனங்காணப்பட்ட சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டத்தை முன்னுரிமைப் படுத்தலானது சமூகத்தின் வேண்டுதல் மற்றும் தேவைப்பாட்டின் அடிப்படையில் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களும், சமூகத்தின் விருப்பத்தின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்திட்டமாகும். |
| (ஈ) | புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக இரண்டு செயற்திட்டங்களுக்கு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 12.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் | முறையான மதிப்பீட்டிற்கு உட்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதும் மற்றும் நிதிஏற்பாட்டைப் | பதில்கள் வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| அப்பணத்திலிருந்து செய்யப்படவுள்ள செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தும் போது திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

**3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 10 தாம்போதிகளை துப்பரவு செய்யும் செயற்திட்டம் | | |
| (i) 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 10 தாம்போதிகளில் சேறு அகற்றி ஆழமாக்கி துப்பரவு செய்வதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாட்டை பயன்படுத்தி புத்தளம், நாயாறு, அருகம்பே, ரெகவ ஆகிய தாம்போதிகைகளுக்காக முன்னுரிமையளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாக காட்டப்பட்டிருந்தும் எதுவித தாம்போதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த நிதிஏற்பாடுகளிலிருந்து நாரா நிறுவனத்திற்கு, தேசிய நீர்வளங்கள் மற்றும் நீர் உயிர்வாழ் அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாவட்ட செயலகம் முதலியவற்றிற்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 171.06 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட செயற்பாடுகளுக்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தாம்போதி சார்ந்த அத்தியாவசதிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இச்செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களைப் போல செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட ஏனைய அபிவிருத்திச் செயற்திட்டங்களின் மூலமும் தாம்போதி அபிவிருத்தி மற்றும் உற்பத்திகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நேரடி அல்லது மறைமுக பெறுபேறுகள் கிடைக்கும். |
| (ii) தாம்போதிகளை துப்பரவு செய்யும் செயற்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் நீரியல் சுற்றாடல்களை பாதுகாப்பதனை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் குடியிருப்பதற்காக | அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்படாத செயற்பாடுகளுக்கு பணம் ஈடுபடுத்தப்படாதிருத்தல் வேண்டும். | தாம்போதி சார்ந்த அத்தயாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இச்செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். வாழ்வாதார நிகழ்ச்சித் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 110 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் தாம்போதிகளைத் துப்பரவு செய்யும் பிரதான செயற்பாடு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை அவ்வாறு இருந்தும் அங்கீகாரம் வழங்கப்படாதிருந்த தாம்போதிகள் சார்ந்தது அல்லாத உட்கட்டமைப்பு வசதிகளான வெப்பத்தை காக்கும் நிர்மாணங்கள், வீதிகளை மேம்படுத்துதல் முதலிய உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூபா 119 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | | திட்டங்களைப் போல செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஏனைய அபிவிருத்தி செயற் திட்டங்களின் மூலமும் தாம்போதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் உற்பத்திகளை மேம்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நேரடியான மற்றும் மறைமுகமான பெறுபேறுகள் கிடைக்கும். |
| (iii) | தாம்போதிகளின் எல்லைகளை புள்ளியிடுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7.7 மில்லியன் பெறுமதியான 4831 எல்லைக் கற்கள் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக தாம்போதிகளுக்கு அருகாமையில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் எல்லைக்கற்களுக்கு மத்தியில் உரிய நியம தரமற்ற எல்லைக் கற்கள் காணப்பட்டமையும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்த்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ளும் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்பட வேண்டிய போதிலும், 2016, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 13.51 மில்லியன் பெறுமதியான கணக்காய்வு ஐய வினாக்கள் முறையே 1, 2 மற்றும் 3 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போது நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சின் வளவில் செயற்பட்டு வந்த சலுகைக் கடைகளுக்காக அமைச்சினால் வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2019 சனவரி 07 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்ட 28730 மின்சார அலகுகளுக்காக அமைச்சு அண்ணளவாகச் செலுத்திய ரூபா 626,314 தொகையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் நிதி மற்றும் ஆதனங்களை முறைகேடான பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப் படாதிருத்தல் வேண்டும். | உரிய காலப்பகுதிக்குள் அறவிட வேண்டிய அனைத்து மின்சாரத்திற்குமான செலவுகளை உரிய நபர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் தொழிலாளர் தொடர்பு பிரிவு இல்லாதிருந்தும் அப்பிரிவிற்கு KD 7689 ஆம் இலக்க கெப் வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகைமை இல்லாத ஒரு உதவி செயலாளரால் அந்த வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தர் விவசாய அமைச்சிற்கு வாகனத்தை எடுத்துக் கொண்டு சென்றிருந்தார். 2019 ஆகஸ்ட் மாதம் வரையும் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனம் முறைகேடாகக் பயன்படுத்தாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான முறைமைகளும் கட்டுப்பாடுகளும் தயாரிக்கப்படுதல் வேண்டும். | பதில்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.5 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கையின் கடற்றொழில் மற்றும் நீர் உயிரின வளர்ப்புத்துறைக்கு நீண்டகால தேசிய கொள்கையை உருவாக்கும் செயற்திட்டத்திற்காக | செயற்திட்டத்திற்குரிய அனைத்து செலவுகளும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட | எதிர்காலத்தில் உரிய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கும் விரைவாக |

| | | |
|---|---|---|
| 2017 மார்ச் மாதத்தின் போது இலங்கை அரசாங்கத்திற்கும் நோர்வேஜியன் வெளிநாட்டு விவகார அமைச்சிற்குமிடையே ரூபா 149,400,000 (க்ரோன் 8,300,000) வழங்குவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்பபட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 111,572,707 செலவு செய்யப்பட்டிருந்தும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் அது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், உடன்படிக்கையின் 10.1 மற்றும் 10.3 ஆம் நிபந்தனைகளின் பிரகாரம் மேற்கூறிய செயற்திட்டத்தின் இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும் அந்நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 2019 யூலை 31 ஆந் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிலாபம் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்களை ஏலமிடும் மண்டபத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் | | |
| (i) | 2007 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 13 ஆம் இலக்க பிற்சேர்க்கையினால் திருத்தப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.5 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கம்பனிகள் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த ஒப்பந்தம் 2016 திசெம்பர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது. அத்திகதி வரை அமுலிலிருந்த 1987 பொது ஒப்பந்த அதிகாரச்சட்டம் இலக்கம் 3 இன் பிரகாரம் பிரதான |

| | | | |
|---|---|---|---|
| | பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்படாத நிர்மாணக் கம்பனிக்கு ரூபா 51.08 மில்லியன் பெறுமதியான மீன்களை ஏலமிடும் மண்டபத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | | ஒப்பந்தக்காரரை பதிவு செய்தல் அவசியமற்றதாகும். எவ்வாறாயினும், 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதிய திருத்தத்தின் பிரகாரம் இன்றுவரை அனைத்து ஒப்பந்தங்களையும் பதிவு செய்தல் அவசியமான போதிலும் அந்த ஏற்பாடுகள் இந்த ஒப்பந்தத்திற்குரியதல்ல. அதற்கிணங்க பிரதான ஒப்பந்தக் காரரின் பதிவு செய்தல் பெற்றுக் கொள்ளப்படவில்லை. |
| (ii) | இந்த ஒப்பந்தம் 180 நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 யூன் மாதமளவில் ரூபா 48 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் அத்திகதியில் 279 நாட்கள் கடந்திருந்தும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் உரிய ஒப்பந்தத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |
| (iii) | அலுமினிய கதவு ஜன்னல் மற்றும் தரைஓடு பிடித்தல் ஆகிய வேலை விடயங்கள் கேள்வி ஆவணங்களில் காட்டப்பட்டிருந்த விபரக்குறிப்புக்களுக்கு இணங்கியிருக்காத வகையில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அலுமினியம் ஜன்னல்களில் விபரக்குறிப்புக்கள் மைக்ரோன் 60 இற்கும் 80 இற்கும் இடையில் உள்ளதாக விலைப்பட்டியலின் அல்லது பரிசோதனை அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்படாது ரூபா 3.25 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே விபரக்குறிப்புக்களின் பிரகாரம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட தரை | கேள்வி ஆவணங்களில் காட்டப்பட்டிருந்த விபரக்குறிப்புக்களுக்கு இணங்கியுள்ளதா என பரீட்சித்து உரிய கொடுப்பனவுகள் செய்யப்படுதல் வேண்டும். | Powder Coated வகையான அலுமினியம் பார்களில் (Powder Coated) களின் தடிப்பு மைக்ரோன் 60 இற்கும் 80 இற்கும் இடைப்பட்டதாக (Coating Thickness 60-80 Microns) இருத்தல் வேண்டும். இது (Powder Coated) சராசரி விபரக்குறிப்பாகும். அதன் காரணமாக இது சம்பந்தமாக விசேட நியமச் சான்றிதழ் தேவையற்றது. அதேபோல அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தரை ஓடுகள் ஈடுபடுத்தப்படாது தரமான ஏனைய மாற்று தரை ஓடு ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதற்காக அங்கீகரிக்கப்பட்ட புதிய விலை செலுத்தப்பட்டதுடன் அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஓடுகளுக்குப் பதிலாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தரை ஓடுகள் பிடிக்கப்பட்டு அளவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலைகளை விட அதிக விலைகின் அடிப்படையில் ரூபா 3.89 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | பயன்படுத்தப்படவில்லை. |
| (ஆ) | வென்னப்புவ வெல்லமங்கர மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம்<br>---------------------------------------------- | | |
| (i) | துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,862 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தை வழங்கும் போது 2006 இன் 6 ஆம் இலக்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.5 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம் $CS_1$ தரத்திலுள்ள ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட வேண்டிய ஒப்பந்தம் $CS_1$ தரத்திலுள்ள ஒப்பந்தக்காரருக்கு எல்லையை மிகைத்து ரூபா 770.39 மில்லியன் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | வழிகாட்டிகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட தரத்திலுள்ள ஒப்பந்தக்காரருக்கு கேள்விகள் வழங்கப்படுதல் வேண்டும். | இணங்கிக் கொள்கின்றேன். பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 2,506 மில்லியனுக்குரிய நிர்மாணக் கம்பனி $CS_1$ தொகுதியின் ஒரு கம்பனிக்காக இருக்க வேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு பிழையான கணிப்பீடு எனவும் பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகள் பிழையாக எடுத்துக் கொள்ளப்பட்டது எனவும் தோன்றுகின்றது. |
| (ii) | 2007 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 13 ஆம் இலக்க பிற்சேர்க்கையால் திருத்தப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவையின்1.5 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒருவர் கேள்விகளைச் சமர்ப்பித்திருந்தும் பதிவு செய்யப்படாத ஒரு நிர்மாணக் கம்பனிக்கு ரூபா 1,862 மில்லியன் தொகையான நிர்மாண ஒப்பந்தத்தை 912 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பிரதான ஒப்பந்தக்காரர் பதிவு செய்தல் அத்தியாவசியமானதல்ல. எவ்வாறாயினும், 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதிய திருத்தத்தின் பிரகாரம் தற்போது அனைத்து ஒப்பந்தக்காரர்களும் பதிவு செய்தல் அத்தியாவசதியமானதாக இருந்த போதிலும்,அந்த ஏற்பாடுகள் இந்த ஒப்பந்தத்திற்குப் பொருத்தமானதல்ல. அதற்கிணங்க பிரதான ஒப்பந்தக்காரரின் பதிவு |

| | | | |
|---|---|---|---|
| | | | பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.2(க) வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டினை விட 5 சதவீதத்திலிருந்து 28 சதவீதம் வரையான வீச்சில் விலைகளில் குறைவு அவதானிக்கப்பட்டது. எனினும், பெறுகை நிறுவனத்தை மதிப்பீடு செய்யும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பொறியியலாளர் மதிப்பீட்டினை விட கேள்வி விலைகள் பாரிய அளவில் குறைவாக இருந்தால் பெறுகை நிறுவனம் இது தொடர்பாக தீவிர கவனம் செலுத்துதல் வேண்டும். | உங்களின் ஐயவினாவில் 28 சதவீத குறைவு எனக் காட்டிலுள்ள விடயத்தின் பொறியியல் மதிப்பீடு ரூபா 3.36 மில்லியனாகும். ஒப்பந்தக்காரரால் அது ரூபா 2.428 மில்லியனுக்கு கேள்வி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தீர்மானம் எடுக்கக்கூடியதாக கவனத்தில் பார்க்க வேண்டிய ஒரு செயற்பாடாகக் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இனங்காணப்பட வில்லை. |
| (iv) | துறைமுகத்தில் இரண்டு நீர்த்தடுப்புக்களை நிர்மாணிப்பதற்குரிய கொடுப்பனவு செய்யப்பட்ட விலைப்பட்டியல்களை ஒப்பீடு செய்த போது வடக்கு நீர்த்தடுப்பின் முதலாவது 125 மீட்டர்களை நிர்மாணிக்கும் போது பயன்படுத்தப்பட்ட பொருட்களின் அளவை விட மேலதிகமான பொருட்கள் பிரதான நீர்த்தடுப்பின் முதலாவது 125 மீற்றர்களை நிர்மாணிக்கும் போது பயன்படுத்தியதன் காரணமாக 11,526.3 கன மீற்றர்களுக்காக ரூபா 55.77 மில்லியன் மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தது. | விசேட காரணம் இல்லாத சந்தர்ப்பத்தில் ஒப்பந்தத்தை நிர்மாணிக்கும் கிரயத்தை சமமான மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீர்த்தடுப்பை நிர்மாணிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட மூலப் பொருட்களின் அளவானது அந்த நீர்த்தடுப்பை நிர்மாணித்த இடத்தில் கடலின் ஆழம் மற்றும் நீர்த்தடுப்பின் அகலத்திற்கு இணங்க தீர்மானிக்கப்படும் வடக்கு நீர்த்தடுப்பு 125 மீற்றரான இடத்தின் அகலம் 45 மீற்றர்களாக இருந்த போதிலும், பிரதான நீர்த்தடுப்பு 300 மீட்டர் இடத்தின் அகலம் 53 மீற்றராகும். எவ்வாறாயினும், கொடுப்பனவை மேற்கொள்ளும் போது Measure and Pay முறைமை பின்பற்றப்பட்டதனால் உள்ளபடியான அளவுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | காரைநகர் படகுத்துறையின் வசதிகளை மேம்படுத்துதல் | | |
| (i) | படகுத்துறையில் இன்டர்லொக் கல் பரப்புவதற்காக 20 நிவ்டன் ($20N/mm^2$) வலுவுள்ள | அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிட்ட கிரயத்திற்கு இணங்க வழங்கி பரப்புவதற்கு | பதில்கள் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்த மில்லிமீற்றருக்கு நிவ்டன் 9.73 லிருந்து நிவ்டன் 18 வரையான வீச்சுடைய கல்லுக்காக ரூபா 14.76 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ii) | படகுத்துறையில் இன்டலொக் கல் பரப்புவதற்கு முன்னர் நிலத்தை தயார்ப்படுத்துவதற்காக அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்படாத ABC கலவைக்காக அங்கீகாரமின்றி 1,054.61 கனமீற்றருக்காக ரூபா 8.89 மில்லியன் தொகையும் வழங்கப்படாத 113.99 கனமீற்றர் ABC கலவைக்காக ரூபா 961,103 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிட்ட விபரக்குறிப்புக்களின் பிரகாரம் வழங்கி பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |
| (iii) | படகுத்துறையின் வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டமானது ரூபா 238.8 மில்லியன் செலவு செய்து 3 தொகுதிகளின் (Package) இன் கீழ் நிர்மாணங்கள் 2019 மார்ச் 22 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2019 யூன் 30 ஆந் திகதி வரையும் படகுத்துறை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேலைகளைப் பூர்த்தி செய்யும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஆக்கபூர்வமாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

## 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனமானது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி குடிபோதையில் வாகனத்தைச் செலுத்தி 2018 யூன் 05 ஆந் திகதி | கடமையின் போது இடம்பெற்ற ஒழுங்கீனம் தொடர்பாக தாபன விதிக்கோவையின் பிரகாரம் உரிய உத்தியோகத்தருக்கு | பதில்கள் வழங்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| விபத்துக்குள்ளாகி அமைச்சிற்கு ரூபா 997,824 நட்டம் ஏற்பட்டிருந்தது. இது சம்பந்தமாக தள்ளிபோடப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ரூபா 10,500 தண்டப்பணமும் விதிக்கப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தரால் ரூபா 423,000 செலவு செய்து வாகனத்தை திருத்தி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் நிதிப்பிரமாணம் 140(2) மற்றும் நிதிப்பிரமாணம் 1642 இன் பிரகாரம் முறையே இந்த நட்டம் சம்பந்தமான அறிக்கையின் பிரதியை அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அனுப்புவதும் மற்றும் விபத்து இடம்பெற்ற உடன் இது தொடர்பாக பொலிசுக்கு அறிக்கையிடுவதும் இடம்பெற்றிருக்கவில்லை. | என்பன பதவி என்று பார்க்காது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் 2030 ஆம் ஆண்டளவில் தனது அமைப்பிற்குரிய அனைத்து நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியையும் 4மூக அபிவிருத்தியையும் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பினையும் வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்குப் பொருத்தமான வகையில் அமைச்சின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளையும் சரியான தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்யும் நடைமுறையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை |